# Padasalai's

## Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

பண்ணிரண்டாம் வகுப்பு வரலாறு விடைகள் முதல் தொகுதி சு.சண்முகசுந்தரம், வரலாறு முதுகலை ஆசிரியர், பாரதியார் வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி. தொடர்புக்கு 9952289757

## ஒரு மதிப் பெண் விடைகள் பாடம் 1 முதல் 8 வரை

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்கவில் இருந்து 1915 ஆண்டு இந்தியா திரும்பினார்
2. இந்தியாவில் ஆங்கிலக் கல்வி 1835 ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
3. மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க. (அ) வில்லியம் ஜோன்ஸ் ஆ) சார்லஸ் வில்கின்ஸ் இ) மாக்ஸ் முல்லர் ஈ) அரவிந்த கோஷ்) : விடை ஈ) அரவிந்த கோஷ்
4. “சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்” - எனக் கூறியவர். பாலகங்காதர திலகர்
5. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.
   (அ) பாலகங்காதர திலகர் - 1. இந்தியாவின் குரல்
   (ஆ) தாதாபாய் நௌரோஜி - 2. மெட்ராஸ் டைம்ஸ்
   (இ) மெக்காலே - 3. கேசரி
   (ஈ) வில்லியம் டிக்பை - 4. இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்
   அ) 2, 4, 1, 3 ஆ) 3, 1, 4, 2 இ) 1, 3, 2, 4 ஈ) 4, 2, 3, 1
   விடை : ஆ) 3, 1, 4, 2
6. பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது ?
   அ) ஆங்கிலக் கல்விச் சட்டம் - 1843
   ஆ) அடிமைமுறை ஒழிப்பு - 1859
   இ) சென்னைவாசிகள் சங்கம் - 1852
   ஈ) இண்டிகோ கலகம் - 1835
   விடை : இ) சென்னைவாசிகள் சங்கம் - 1852
7. பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான காலவரிசையைத் தேர்வு செய்க.
   (i) கிழக்கிந்தியக் கழகம்
   (ii) சென்னை மகாஜன சங்கம்
   (iii) சென்னைவாசிகள் சங்கம்
   (iv) இந்தியச் சங்கம்
   அ) ii, I, iii, iv (ஆ) ii, iii, I, iv இ) iii, iv, I, ii (ஈ) iii, iv, ii, i
   விடை : இ) iii, iv, I, ii
8. இந்திய தேசியக் காங்கிரஸை நிறுவியவர். **A.O. ஹியூம்**
9. இந்தியத் தேசியக் காங்கிரஸின் முதல் தலைவர். **W. C. பானர்ஜி**
10. “இந்தியாவின் முதுபெரும் மனிதர்” என அழைக்கப்படுபவர். தாதாபாய்நௌரோஜி
11. “வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்” என்ற நூலை எழுதியவர். தாதாபாய்நௌரோஜி
12. கூற்று : ஆங்கில அரசாங்கம் தடையற்ற வாணிகக் கொள்கையைப் பின்பற்றியது.
   காரணம் (கா) : இங்கிலாந்தின் தடையற்ற வாணிபக் கொள்கையினால் இந்தியா ஈடான நன்மையைப் பெற்றது.
   அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
   ஆ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
   இ) கூற்று சரி, காரணம் தவறு.
   ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு.
   விடை: இ) கூற்று சரி, காரணம் தவறு.

13. ஒரிஷா பஞ்சம் குறித்த பின்வரும் கூற்றுக்களில் சரியானவை எவை / எது ?

கூற்று 1 : 1866 ஆம் ஆண்டில் ஒன்றரை மில்லியன் மக்கள் ஒரிசாவில் பட்டினியால் இறந்தனர்.
கூற்று 2 : பஞ்ச காலத்தில் 200 மில்லியன் பவுண்ட் அரிசியை பிரிட்டனுக்கு ஆங்கில அரசு ஏற்றுமதி செய்தது.
கூற்று 3 : ஒரிசா பஞ்சமானது தாதாபாய் நௌரோஜியை இந்திய வறுமை குறித்து வாழ்நாள் ஆய்வை மேற்கொள்ளத் தூண்டியது.

அ) 1, 2 ஆ) 1, 3 இ) இவற்றுள் எதுவுமில்லை ஈ) இவை அனைத்தும்

<u>விடை: ஈ) இவை அனைத்தும்.</u>

14. கூற்று (கூ) : தாதாபாய் நௌரோஜி இந்தியத் தேசியக் காங்கிரஸின் தலைவராக மூன்று முறை தேர்வு செய்யப்பட்டார்.

காரணம் (கா) : 1905 ஆம் ஆண்டு வரையில் இந்திய விடுதலை இயக்கம் அரசியலமைப்பு வாதிகளின் ஆதிக்கத்தில் இருந்தது.

அ) கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி

<u>விடை: அ) கூற்று காரணம் இரண்டும் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.</u>

## <u>தீவிரவாதத்தின் எழுச்சியும் சுதேசி இயக்கமும்</u>

Padasalai

15. சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் காங்கிரஸின் அடுத்தத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது <u>லாலா லஜபதி ராய்</u>

16. பின்வரும் கூற்றுகளை காண்க.

(i) 1905 இல் மேற்கொள்ளப்பட்ட வங்கப் பிரிவினை ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.
(ii) 1905 இல் நடைபெற்ற கல்கத்தா மாநாட்டில் சுரேந்திரநாத் பானர்ஜி பிரிட்டிஷ் பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணிக்க அழைப்பு விடுத்தார்.
(iii) 1905 ஆகஸ்ட் 7 இல் கல்கத்தா நகர அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் சுதேசி இயக்கம் குறித்த முறையான அறிவிப்பு வழங்கப்பட்டது.
மேற்கண்ட கூற்றுகளில் எது / எவை சரியானவை.

அ) (i) மட்டும் ஆ) (i) மற்றும் (iii) மட்டும் இ) (i) மற்றும் (ii) மட்டும் ஈ) மேற்கண்ட அனைத்தும்

<u>விடை: ஈ) மேற்கண்ட அனைத்தும்</u>

17. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (அ) | இந்தியப் பத்திரிகைச்சட்டம்,1910 | - | 1. சுய ஆட்சி. |
| (ஆ) | விடிவெள்ளிக் கழகம் | - | 2. சார்ந்திருக்கும் நிலைக்கு எதிரான புரட்சி. |
| (இ) | சுயராஜ்யம் | - | 3. தேசிய அளவிலான செயல்பாடுகளை நசுக்கியது. |
| (ஈ) | சுதேசி | - | 4. கல்விக்கான தேசியக் கழகம். |

| | ஆ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) | 1 | 2 | 3 | 4 |
| இ) | 3 | 4 | 1 | 2 |
| ஈ) | 1 | 2 | 4 | 3 |

<u>விடை: இ) 3 4 1 2</u>

18. பின்வருவனவற்றுள் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?

அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்

ஆ) ஜி. சுப்ரமணியம் - விடிவெள்ளிக் கழகம்

இ) மிண்டோ பிரபு - பல்கலைக் கழகச் சட்டம், 1904

ஈ) தீவிர தேசியவாத மையம் - சென்னை

விடை : அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி - ஆனந்த மடம்

19. கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர். ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர் குமார் கோஷ்

20. கூற்று : 1905 அக்டோபர் 16 துக்க நாளாக அனுசரிக்கப்பட்டது.

காரணம் : மேற்படி நாளில் வங்காளம் முறைப்படி இரண்டு மாகாணங்களாக பிரிக்கப்பட்டது.

அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு, காரணம் சரி

விடை: அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

21. கூற்று : வ. உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

காரணம் : இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையை அவர் எதிர்த்தார்.

அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ) கூற்று சரி, காரணம் தவறு

ஈ) கூற்று தவறு, காரணம் சரி

விடை: அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

Padasalai

22. சுப்ரமணிய பாரதி குறித்த பின்வரும் எந்த கூற்று தவறானது.

அ) பாரதி சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராக இருந்தார்.

ஆ) பாரதி திலகரின் **Tenets of New Party** என்ற நூலை தமிழில் மொழி பெயர்த்தார்.

இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்.

ஈ) பாரதி பெண்களுக்கான 'சக்ரவர்த்தினி' என்ற இதழின் ஆசிரியராக இருந்தார்.

விடை: இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்.

## இந்திய விடுதலைப் போரில் முதல் உலகப் போரின் தாக்கம்

23. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது ? அன்னிபெசண்ட்

24. பின்வருவனவற்றுள் அன்னிபெசன்ட் பற்றிய சரியான கூற்று எது ?

1. கர்னல் எச்.எஸ். ஆல்காட்டிற்குப் பிறகு பிரம்மஞான சபையின் தலைவராக அன்னிபெசண்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
2. 1914 இல் அவர் காமன்வீல் என்ற வாராந்திர இதழை தொடங்கினார்.
3. 1915 ஆம் ஆண்டு **"How India Wrought for Freedom"** என்ற தலைப்பிலான புத்தகத்தை பதிப்பித்தார்.

அ) 1 மற்றும் 2 ஆ) 2 மற்றும் 3 இ) 1 மற்றும் 3 ஈ) 1, 2 மற்றும் 3

விடை: ஈ) 1, 2 மற்றும் 3

25. கூற்று : ஜின்னாவை இந்து - முஸ்லீம் ஒற்றுமையின் தூதர் என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்.
காரணம் : லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பி ஜின்னா ஆவார்.
அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கமல்ல.
ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கம்.
இ) கூற்று தவறு, காரணம் சரி.
ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.
விடை: ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்கான விளக்கம்.

26. பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகம் யாரால் நிறுவப்பட்டது? மதன்மோகன் மாளவியா

27. 1916 ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்.
அ) முஸ்லீம் லீக் எழுச்சி.
ஆ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தற்காலிக இணைப்பு.
இ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை ஏற்றுக் கொண்டது.
ஈ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறை போக்கு.
விடை: இ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை ஏற்றுக் கொண்டது.

28. பின்வருவனவற்றை கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் உதவியுடன் பொருத்துக.

| | | |
|---|---|---|
| (அ) கதார் கட்சி | - | i. 1916 |
| (ஆ) நியூ இந்தியா | - | ii. 1913 |
| (இ) தன்னாட்சி இயக்கம் | - | iii. 1909 |
| (ஈ) மின்டோ-மார்லி சீர்திருத்தம் | - | iv. 1915 |

அ) ii, iv, I, iii ஆ) iv, I, ii, iii இ) I, iv, iii, ii ஈ) ii, iii, iv, i
விடை: அ) ii, iv, I, iii

29. “Indian Unrest” என்ற புத்தகத்தின் ஆசிரியர். லேவண்டைன் சிரோலி

30. கதார் கட்சி யாரால் நிறுவப்பட்டது ? லாலா ஹர்தயாள்

31. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார் ? லாலா லஜபதி ராய்

## காந்தியடிகள் தேசியத் தலைவராக உருவெடுத்து மக்களை ஒன்றிணைத்தல்

32. காந்தியடிகளின் அரசியல் குரு யார் ? கோகலே

33. தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய காந்தி தனது வெற்றிகரமான முதலாவது சத்யாகிரகப் போராட்டத்தை தொடங்கிய இடம். சம்பரான்

34. சைமன் கமிஷன் காங்கிரஸால் ஏன் புறக்கணிக்கப்பட்டது ? அக்குழுவில் இந்தியர்கள் இடம்பெறவில்லை.

35. இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது ? டிசம்பர் 31, 1929

36. 1923 இல் மோதிலால் நேரு மற்றும் சி. ஆர். தாஸ் -ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன ? சுயராஜ்யக் கட்சி

37. பின்வருவனவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

(அ) நாமசூத்ரா இயக்கம் - 1. வடமேற்கு இந்தியா
(ஆ) ஆதிதர்ம இயக்கம் - 2. தென்னிந்தியா
(இ) சத்யசோதக் இயக்கம் - 3. கிழக்கிந்தியா
(ஈ) திராவிட இயக்கம் - 4. மேற்கு இந்தியா

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 1 | 4 | 2 |
| ஆ) | 2 | 1 | 4 | 3 |
| இ) | 1 | 2 | 3 | 4 |
| ஈ) | 3 | 4 | 1 | 2 |

விடை: அ) 3 1 4 2

38. ஒத்துழையாமை இயக்கத்தின் பல்வேறு நிலைகளை காலவரிசைப்படுத்துக.

(1) அமிர்தசரஸ் நகரில் பிரிட்டிஷ் படையால் ஆயுதம் ஏந்தாத மக்கள் மீது கொடிய தாக்குதல் நடத்தப்பட்டது.
(2) நீதிமன்ற விசாரணை இன்றி எவரையும் சிறையில் அடைக்க ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்டது.
(3) சௌரி சௌரா வன்முறைச் சம்பவம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொள்ள வழிவகுத்தது.
(4) கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழையாமை என்ற காந்தியடிகளின் முன்மொழிவை ஏற்றுக் கொண்டது.

அ) 2, 1, 4, 3 ஆ) 1, 3, 2, 4 இ) 2, 4, 1, 3 ஈ) 3, 2, 4 ,1

விடை: அ) 2, 1, 4, 3

39. பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தவில்லை ?

அ) பஞ்சாப் துணை ஆளுநர் - 1. ரெஜினால்டு டையர்
ஆ) தலித் - பகுஜன் இயக்கம் - 2. டாக்டர். அம்பேத்கர்
இ) சுயமரியாதை இயக்கம் - 3. பெரியார் ஈ.வெ.ரா.
ஈ) சத்யாகிரக சபை - 4. ரௌலட் சட்டம்

விடை: அ) பஞ்சாப் துணை ஆளுநர் - 1. ரெஜினால்டு டையர்

40. பின்வரும் நிகழ்வுகளை சரியான காலவரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

(i) கேதா சத்யாகிரகம்
(ii) சம்பரான் இயக்கம்
(iii) பிராமணரல்லாதார் இயக்கம்
(iv) வேதாரண்யம் உப்பு சத்யாகிரகம்

அ) ii, iii, I, iv ஆ) iii, ii, I, iv இ) ii, I, iv, iii ஈ) ii, I, iii, iv

விடை: அ) iii, ii, I, iv

41. பின்வருவனவற்றுள் எது / எவை சரியானவை அல்ல.

(i) காந்தியடிகள் அகமதாபாத்தில் சபர்மதி ஆஸ்ரமத்தை நிறுவினார்.
(ii) வல்லபாய் படேல் ஒரு வழக்கறிஞர்.
(iii) சைமன் குழுவினை முஸ்லீம்லீக் வரவேற்றது.
(iv) இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் காந்தியடிகள் கலந்து கொண்டார்.

அ) i மட்டும் ஆ) i மற்றும் iv இ) ii மற்றும் iii ஈ) iii மட்டும்

விடை: ஈ) iii மட்டும்

42. ஒத்துழையாமை இயக்கம் உள்ளடக்கியவை.

(அ) பள்ளி மற்றும் கல்லூரிகளை புறக்கணித்தல்.
(ஆ) அரசு வழங்கிய பட்டங்களை திருப்பியளித்தல்.
(இ) உண்ணாவிரதங்கள் கடைப்பிடிப்பதை எதிர்த்தல்.
(ஈ) அரசுக்கு எதிரான சதி வேலைகளில் ஈடுபடுதல்.
அ) அ மற்றும் ஆ ஆ) ஆ மற்றும் இ இ) அ மற்றும் ஈ ஈ) இ மற்றும் ஈ

விடை: அ) அ மற்றும் ஆ

43. கூற்று : பி.ஆர். அம்பேத்கர் மஹத் சத்யாகிரகத்தைத் தொடங்கினார்.
காரணம் : அவர் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை ஒருங்கிணைக்க முயன்றார்.
அ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று காரணம் இரண்டும் சரி.
ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு.
விடை: ஆ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.

44. கூற்று : 1919 இல் இந்தியக் கவுன்சில் சட்டம் (ம) ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
காரணம் : இது மிதவாதிகளை அரவணைத்து தீவிரவாதிகளை தனிமைப்படுத்தும் பிரிட்டிஷாரின் கொள்கையின் ஒரு பகுதியாகும்.

அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று சரி மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு காரணம் சரி.
விடை: அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

45. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைவர்களில் சுயராஜ்யக் கட்சியுடன் தொடர்பில்லாத தலைவர்.
அ) ராஜாஜி ஆ) சித்தரஞ்சன் தாஸ் இ) மோதிலால் நேரு (ஈ) சத்யமூர்த்தி
விடை: அ) ராஜாஜி

46. காந்தியடிகளின் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு.
அ) ஏப்ரல் 6, 1930 ஆ) மார்ச்6, 1930 இ) ஏப்ரல் 4, 1939 ஈ) மார்ச்4, 1930
விடை: அ) ஏப்ரல் 6, 1930

## ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் புரட்சிகர தேசியவாதத்தின் காலம்

47. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? 1925

48. கல்பனா தத் எதனுடன் தொடர்புடையவர்? இந்தியக் குடியரசு இராணுவம்

49. பின்வருவனவற்றைப் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| (அ) | கான்பூர் சதி வழக்கு | - | 1. அடிப்படை உரிமைகள் |
| (ஆ) | மீரட்சதி வழக்கு | - | 2. சூரியா சென் |
| (இ) | சிட்டகாங் ஆயுதக்கிடங்கு கொள்ளை | - | 3. 1929 |
| (ஈ) | இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாடு | - | 4. 1924 |

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 2, 1

விடை: ஈ) 4, 3, 2, 1

50. கீழ்க்காண்பவர்களில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் உயிரிழந்தவர் ஜதீந்திரநாத் தாஸ்

51. பின்வரும் கூற்றுகளில் பொருளாதாரப் பெரும் மந்தம் குறித்துச் சரியானவை.

(i) இது வடஅமெரிக்காவில் ஏற்பட்டது.
(ii) வால் தெருவில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பெரும் மந்தத்தை விரைவுபடுத்தியது. (iii) பெரும் மந்தம் வசதி படைத்தவர்களை மட்டுமே பாதித்தது.
(iv) விலைவீழ்ச்சி அடைந்ததால் பெரும் மந்தத்தின் போது சிறப்பான வாழ்க்கைமுறையை தொழிலாளர்கள்அனுபவித்தனர்.

அ) i மற்றும் ii ஆ) I, ii மற்றும் iii இ) i மற்றும் iv ஈ) I, iii மற்றும் iv

விடை: அ) i மற்றும் ii

52. முதலாவது பருத்தித் தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு. 1854

53. கொடுக்கப்பட்ட குறிப்புகளை கொண்டு சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(i) 'Chittagong Armoury Raiders Reminiscences" எனும் நூல் கல்பனா தத் என்பவரால் எழுதப்பட்டது.
(ii) கல்பனா தத் தாய்நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் தாங்கி போராடினார்.
(iii) கல்பனா தத் பேரரசருக்கு எதிராகப் போர் தொடுத்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டார்.

அ) i மட்டும் ஆ) i மற்றும் ii இ) ii மற்றும் iii
ஈ) அனைத்தும்

விடை: ஈ) அனைத்தும்

54. முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது? பம்பாய் - தானே

55. கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு 1855

56. பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்? எஸ்.ஏ. டாங்கே

57. கான்பூர் சதி வழக்குக் குறித்தபின்வரும் எந்த கூற்றுகள் சரியானவை?

(i) சணல் மற்றும் பருத்தி தொழிற்சாலைகளில் தொழிற்சங்கங்கள் தோன்றின.
(ii) இவ்வழக்கில் கம்யூனிஸ்ட்களும் தொழிற்சங்கவாதிகளும் குற்றம் சாட்டப்பட்டனர். (iii) இவ்வழக்கு நீதிபதி H.E. ஹோம்ஸ் என்பவரின் முன்பாக விசாரணைக்கு வந்தது. (iv) விசாரணை மற்றும் சிறைத் தண்டனையானது இந்தியாவில் காங்கிரஸ் நடவடிக்கைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

அ) i, ii மற்றும் iii ஆ) I, iii மற்றும் iv இ) ii, iii மற்றும் iv ஈ) I, ii மற்றும் iv

விடை: அ) i, ii மற்றும் iii

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

## தேசியவாத அரசியலில் வகுப்புவாதம்

58. முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது? பாரசீகம

59. பின்வரும் சமூக, சமயச் சீர்திருத்த நிறுவனங்களை அவை தோற்றுவிக்கப்பட்டதன் கால அடிப்படையில் வரிசைப்படுத்துக.

1. அனைத்து இந்திய முஸ்லிம் லீக்
2. ஆரிய சமாஜம்
3. அனைத்திந்திய இந்து மகாசபை
4. பஞ்சாப் இந்து சபை

அ) 1, 2, 3, 4 ஆ) 2, 1, 4, 3 இ) 2, 4, 3, 1 ஈ) 4, 3, 2, 1

விடை: ஆ) 2, 1, 4, 3

60. லண்டன் பிரிவிக் கவுன்சிலில் இடம் பெற்ற முதல் இந்தியர் சையது அமீர் அலி

61. கூற்று : 1870 இல் வங்காள அரசாங்க ஆணை இஸ்லாமிய தொழில் வல்லுநர் குழுக்கள் இடையே ஐயங்களை ஏற்படுத்தியது.

காரணம் : அவ்வாணை உருது மொழி பாரசீக - அரபி எழுத்து முறைக்குப் பதிலாக இந்தியைக் கொண்டு வந்தது.

அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

ஆ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

இ) கூற்று தவறு, காரணம் சரி.

ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

விடை: ஆ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

62. சரியான கூற்றுகளைக் கண்டுபிடிக்கவும்.

கூற்று I : ஆரம்பகால தேசியவாதிகளில் சிலர் தேசியவாதத்தை இந்துமத அடித்தளத்தில் மட்டுமே உருவாக்க முடியும் என நம்பினர்.

கூற்று II : இந்து மகாசபை போன்ற அமைப்புகள் எடுத்த முயற்சிகள், அன்னி பெசண்ட் அம்மையாரால் நடத்தப்பட்ட பிரம்மஞான சபையால் வலுப்பெற்றது.

கூற்று III : ஆரிய சமாஜத்தின் சுத்தி மற்றும் சங்காதன் நடவடிக்கைகளில் காங்கிரஸ் பங்கேற்றது இந்து - முஸ்லிம்கள் இடையே பிரிவை உண்டாக்கியது.

அ) I மற்றும் II ஆ) I மற்றும் III இ) II மற்றும் III ஈ) அனைத்தும்

விடை: ஈ) அனைத்தும்

63. இரு நாடு கொள்கையை முதன்முதலில் கொண்டு வந்தவர் சர் வாசிர் ஹசன்

64. 1937 இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. 7 மாகாணங்கள்

65. காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த நாளினை முஸ்லிம் லீக் மீட்பு நாளாக கொண்டாடியது. 22 டிசம்பர், 1939

66. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (அ) | அன்னி பெசண்ட் | - | 1. அலிகார் இயக்கம் |
| (ஆ) | சையது அகமது கான் | - | 2. தயானந்த சரஸ்வதி |
| (இ) | கிலாபத் இயக்கம் | - | 3. பிரம்மஞான சபை |
| (ஈ) | சுத்தி இயக்கம் | - | 4. அலி சகோதரர்கள் |

அ) 3 1 4 2 ஆ) 1 2 3 4 இ) 4 3 2 1 ஈ)2 3 4 1

விடை: அ) 3 1 4 2

67. பின்வரும் கூற்றுகளில் இருந்து சரியானவற்றைத் தேர்வு செய்க.

(i) அலிகார் இயக்கத்தைத் தோற்றுவித்தசர் சையது அகமது கான் தொடக்கத்தில் காங்கிரசை ஆதரித்தார்.

(ii) 1909 இல் தோற்றுவிக்கப்பட்ட பஞ்சாப் இந்து சபையானது இந்துமத வகுப்புவாத அரசியலுக்கு அடித்தளமிட்டது.

அ) கூற்று (i) மற்றும் (ii) சரி
ஆ) கூற்று (i) சரி (ii) தவறு
இ) கூற்று (i) தவறு (ii) சரி
ஈ) கூற்று (i) மற்றும் (ii) தவறு

விடை இ) கூற்று (i) தவறு (ii) சரி

68. எப்போது முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கை நாளை அனுசரித்தது? 16 ஆகஸ்ட், 1946

69. வேவல் பிரபுவிற்குப் பின்னர் பதவியேற்றவர். மௌண்ட்பேட்டன்

70. கூற்று : பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்புவாதத்தை வளர்க்கவும் பரப்பவும் பின்பற்றியது தனித்தொகுதிக் கொள்கையாகும்

காரணம் : மக்கள் இரண்டு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட்டதால் வகுப்புவாத அடிப்படையிலேயே வாக்களித்தனர்.

அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
இ) கூற்று மற்றும் காரணம் தவறு.
ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

விடை: ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

Padasalai

71. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) இந்துமத மறுமலர்ச்சி - 1. ஆ.ளு. கோல்வாக்கர்
(ஆ) கலிப்பா பதவி ஒழிப்பு - 2. ஆரிய சமாஜம்
(இ) லாலா லஜபதி ராய் - 3. 1924
(ஈ) ராஷ்டிரிய சுயசேவா சங்கம் - 4. இந்து - முஸ்லிம் மாகாணங்களாக பஞ்சாப் பிரித்தல்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 2 | 4 | 3 | 1 |
| ஆ) | 3 | 4 | 1 | 2 |
| இ) | 1 | 3 | 2 | 4 |
| ஈ) | 2 | 3 | 4 | 1 |

விடை: ஈ) 2 3 4 1

## இந்திய தேசிய இயக்கத்தின் இறுதிக் கட்டம்

72. தனிநபர் சத்தியாகிரகம் எப்போது தொடங்கியது? அக்டோபர் 17, 1940

73. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மோகன் சிங் (அ) இந்து - முஸ்லீம் கலவரம்
2. கோவிந்த் பல்லப் பந்த் (ஆ) ஆகஸ்ட் கொடை
3. லின்லித்கோ பிரபு (இ) பிரிவினைத் தீர்மானத்தை முன்மொழிந்தவர்
4. நவகாளி (ஈ) இந்திய தேசிய இராணுவம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 2 | 1 |
| ஆ) | 4 | 2 | 1 | 3 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 3 | 2 | 4 | 1 |

விடை: இ) 4 3 2 1

74. கிரிப்ஸ் தூதுக்குழு யாருடைய ஆட்சியின் போது இந்தியாவிற்கு வருகை தந்தது? லின்லித்கோ பிரபு

75. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

(அ) அமெரிக்கக் குடியரசுத் தலைவர் - 1. டோஜா
(ஆ) சீனக் குடியரசுத் தலைவர் - 2. வின்ஸ்டன் சர்ச்சில்
(இ) பிரிட்டிஷ் பிரதமர் - 3. ஷியாங்கே ஷேக்
(ஈ) ஜப்பான் பிரதமர் - 4. எப்.டி. ரூஸ்வெல்ட்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 4 | 3 | 2 |
| ஆ) | 1 | 3 | 2 | 4 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 4 | 2 | 3 | 1 |

விடை: இ) 4 3 2 1

Padasalai

76. சுபாஷ் சந்திர போஸ் எந்த ஆண்டு காங்கிரஸில் இருந்து நீக்கப்பட்டார்? 1939

77. மகாத்மா காந்தியடிகள் 'செய் அல்லது செத்துமடி' என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்? வெள்ளையனே வெளியேறு இயக்கம்

78. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் இரகசியமாக வானொலி நிலையத்தை நடத்தியவர் யார்? உஷா மேத்தா

79. இந்திய தேசிய இராணுவப்படைவீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார்? ஜவஹர்லால் நேரு

80. 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்ட போது இந்தியாவின் அரசபிரதிநிதி யார்? லின்லித்கோ பிரபு

81. கூற்று : வெள்ளையனே வெளியேறு இயக்கம் அதன் குறிக்கோளை அடையவில்லை.
காரணம் : அப்போதைய பிரிட்டிஷ் அரசு கடுமையான அடக்கு முறையைப் பின்பற்றியது.
அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, ஆனால் காரணம் தவறு
ஈ) கூற்று தவறு, ஆனால் காரணம் சரி.
விடை : அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.

82. இந்திய தேசிய இராணுவம் எந்தநாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது? ஜப்பான்

83. இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் பெயர் ஜான்ஸி ராணி படைப்பிரிவு ஆகும்.

84. சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தை சுபாஷ் சந்திர போஸ் எங்கு ஏற்படுத்தினார்? சிங்கப்பூர்

85. இந்திய தேசிய இராணுவப்படை மீதான விசாரணை எங்கு நடைபெற்றது? செங்கோட்டை, புதுடெல்லி

86. 1945 இல் சிம்லா மாநாட்டைக் கூட்டிய அரசபிரதிநிதி. வேவல் பிரபு

87. 1946 இல் இடைக்கால அரசாங்கம் யாருடைய தலைமையில் அமைக்கப்பட்டது? ஜவஹர்லால் நேரு

88. சரியான வரிசையில் அமைத்து விடையைத் தேர்வு செய்க.
(i) இந்திய தேசிய இராணுவம் தோற்றுவிக்கப்படுதல்
(ii) இராயல் இந்திய கடற்படைக் கலகம்
(iii) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை
(iv) இராஜாஜி திட்டம்
அ) ii, i, iii, iv ஆ) i, iv, iii, ii இ) iii, iv, i, ii
ஈ) iii, iv, ii, i
விடை : ஆ) i, iv, iii, ii

89. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்வு செய்க.
(i) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை
(ii) நேரடி நடவடிக்கை நாள்
(iii) ஆகஸ்ட் கொடை
(iv) தனிநபர் சத்தியாகிரகம்
அ) I, ii, iii, iv ஆ) iii, I, ii, iv இ) iii, iv, I, ii ஈ) I, iii, iv, ii
விடை: இ) iii, iv, I, ii

90. இந்தியர் கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படும் என அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் யார்? கிளமண்ட் அட்லி

91. பிரிட்டிஷார் எந்த காலத்திற்குள் இந்தியாவைவிட்டு வெளியேற முடிவு செய்தனர்? ஜுன், 1948

## காலனியத்துக்குப் பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு

92. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1. | 1928 | (அ) | ஜேவிபி குழு |
| 2. | மாநில மறுசீரமைப்பு ஆணையம் | (ஆ) | சர் சிரில் ராட்கிளிப் |
| 3. | 1948 | (இ) | பசல் அலி - |
| 4. | எல்லை வரையறை ஆணையம் | (ஈ) | நேரு குழு அறிக்கை |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| ஆ) | 3 | 4 | 2 | 1 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 4 | 2 | 3 | 1 |

விடை: ஆ) 3 4 2 1

93. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படி அமைக்கவும்.
(i) இந்திய சுதந்திரம் குறித்த அட்லியின் அறிவிப்பு.
(ii) நேருவின் தலைமையிலான இடைக்கால அரசாங்கம்.
(iii) மௌண்ட்பேட்டன் திட்டம்.
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் இருந்து விடையினை தேர்ந்தெடுக்கவும்.
அ) ii, I, iii ஆ) I, ii, iii இ) iii, ii, i ஈ) ii, iii, i
விடை: அ) ii, I, iii

94. பின்வருவனவற்றைப் பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) சீனமக்கள் குடியரசு - 1. பெல்கிரேடு
(ஆ) பாண்டுங்மாநாடு - 2. மார்ச் 1947
(இ) ஆசிய உறவுகள் மாநாடு - 3. ஏப்ரல் 1955
(ஈ) அணிசேரா இயக்கத்தின் தோற்றம் - 4. ஜனவரி 1, 1950

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | 3 | 4 | 2 | 1 |
| ஆ) | 4 | 2 | 3 | 1 |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 3 | 2 | 4 | 1 |

விடை: இ) 4 3 2 1

95. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்க.
(i) சீனமக்கள் குடியரசு
(ii) சீனாவுடனான இந்தியப் போர்
(iii) அரசமைப்பு நிர்ணயச் சபையின் கூட்டம்
(iv) பஞ்சசீலக் கொள்கை
(எ) நேரு - லியாகத் அலி கான் ஒப்பந்தம்
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் இருந்து விடையினை தேர்ந்தெடுக்கவும்.
அ) I, ii, iii, iv, v ஆ) iii, I, v, iv, ii இ) iii, iv, I, v, ii ஈ) I, iii, iv, v, ii
விடை: ஆ) iii, I, v, iv, ii

96. மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள் ஜனவரி 30, 1948

97. ஆந்திர மாநில கோரிக்கையினை முதன்முதலில் எழுப்பியவர் பட்டாபி சீத்தாராமையா

98. அரசமைப்பு நிர்ணயச் சபையில் குறிக்கோள் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர். ஜவஹர்லால் நேரு

99. பி.ஆர். அம்பேத்காரை எந்த தொகுதியில் இருந்து தேர்ந்தெடுப்பதைக் காங்கிரஸ் உறுதி செய்தது? பம்பாய்

100. கூற்று : ராட்கிளிப்பின் எல்லைவரையறை அனைத்து வகையான முரண்பாடுகளையும் கொண்டிருந்தது.

காரணம் : முரண்பாடுகள் இருப்பினும் அது அனைவராலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.
இ) கூற்று சரி, காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு, காரணம் சரி.
விடை: ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை.

101. அரசமைப்பு நிர்ணய சபையின் முதல்கூட்டம் எப்போது நடைபெற்றது? டிசம்பர் 9, 1946

102. அரசமைப்பு எப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது? நவம்பர் 26, 1949

103. மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம் ஆந்திரா

.

---

100 சதவீதம் மதிப்பெண் பெற தினமும் ஒரு மதிப்பெண் வினாவை வாசித்தால் மட்டும் போதும். மனதில் தங்கி விடும். மதிப்பெண் தானாகவே வந்து விடும். வாசிக்க 30 நிமிடங்கள் போதும்.

முழு மதிப்பெண் பெற வாழ்த்தும்
சு.சண்முகசுந்தரம்
முதுகலை ஆசிரியர் (வரலாறு)
பாரதியார் வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி,
தூத்துக்குடி

Padasalai

# இரண்டு மதிப்பெண் விடைகள் பாடம் 1 முதல் 8 வரை

பாடம் 1 முதல் 8 வரை இரண்டு மதிப்பெண் விடைகள்

1. தேசியம் என்றால் என்ன?

1. தனது நாட்டிற்கு விசுவாசமாகவும் பக்தியோடும் இருத்தல்.

2. தனது நாட்டை உயர்வாக, பிறநாடுகளுக்கு போட்டியாக தனது பண்பாடு, வளர்சியில் சிறப்பு கவனம் செலுத்துதல்

2. புதிய நிலஉடமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுது க

1. மரபு சார்ந்த நிலஉடமை சிதைந்து நிலம் விற்பனைப் பொருளானது.

2. இந்திய வேளாண்மை வணிக மயமானது. சந்தைக்கு தேவையானதை உற்பத்தி செய்தது

3. அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக

1. இந்திய விவசாயிகளுக்கு சிறிய தொகையை முன் பணமாக கொடுத்து வேளாண் பயிரை பயிரிடாமல் அவுரியை மட்டும் பயிரிட கட்டாயப்படுத்தினர்

2. அவுரி பண்ணையாளர் கொடுக்கும் விலை சந்தை விலையை விட குறைவாக இருந்ததால் விவசாயிகள் வரிபாக்கியை செலுத்த முடியாமல் போகவே 1859-60 ல் இக்கலகம் நடைபெற்றது. புரட்சி அடக்கப்பட்டு விவசாயிகள் பண்ணையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

4. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவரி?

1. இல்பர்ட் மசோதா இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க அனுமதி வழங்கியது

2. ரிப்பன் பிரபு காலத்தில் கொண்டுவரப்பட்ட இம்மசோதா ஐரோப்பியர்களின் எதிர்ப்பால் அவர்களுக்கு சாதகமாக திருத்தம் செய்யப்பட்டது..

5. நவீன கல்வியில் சமயப்பரப்புக் குழவினரின் பங்கினை விளக்குக

1. நவீன மத சார்பற்ற கல்வியின் மூலம் அடித்தட்டு மக்களும் விளிம்பு நிலை மக்களும் கல்வி பெற உதவினர்

2. கிறிஸ்தவம் விடுத்த சவால்களால் பல்வேறு சமூக சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின

6. ஆங்கில பாராளுமன்றத்திற்கு சென்னை வாசிகள் சங்கத்தினர் அளித்த கோரிக்கைகள் என்ன?

1. விவசாயத்தில் பண்டைய கிராம முறையும், நீதிபதிகள் வட்டார மொழிகளில் புலமைபெறவும் வலியுறுத்தியது

2. மான்யங்கள் கிறஸ்தவ சமய பரப்பு நிறுவனத்திற்கு செல்வதை எதிர்த்தது. இரண்டாவது மனுவில் கம்பெனி ஆட்சி முடிவுக்கு கொண்டுவர வற்புறுத்தியது.

7. இந்திய தேசிய காங்கிரசுக்கு முன்னர் தொடங்கப்பட்ட அமைப்புகளின் பட்டியலை தயார் செய்க

1. சென்னை வாசிகள் சங்கம் - 1852- லட்சுமி நரசு

சென்னை மகாஜன சங்கம் - 1854 – விரராகவசாரி, சுப்பிரமணிய ஐயர், பி. ஆனந்தசார்லு ஆகியோர்.

2. தாதா பாய் நௌரோஜி யின் இந்திய சங்கம் 1865

கிழக்கிந்திய கழகம் 1866

8. தொடக்க கால முக்கிய தேசிய வாதிகளைக் கண்டறிக

1.ராஜாராம் மோகன் ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், சுவாமி விவேகானந்தர், அரவிந்த கோஷ், கோகலே, தாதாபாய் நௌரோஜி, பெரோஸ்ஷா மேத்தா, சுரேந்திரநாத் பானர்ஜி

2. தமிழ்நாட்டில் லட்சுமி நரசு, சுப்பிரமணியம், விரராகவாச்சாரி, ஆனந்த சார்லு, ரங்கையா, பாலாஜி ராவ், சேலம் ராமசாமி

9. மிதவாத தேசியவாதிகளின் 'இறைஞ்சுதல் கொள்கை' **(The Medcant policy)** என்றால் என்ன?

1. மிதவாத தேசிய வாதிகளின் கவனமான அணுகுமுறை, ஆங்கிலேயரிடம் மன்றாடுதல், மனுச் சமர்பித்தல் போன்றதே இறைஞ்சுதல் கொள்கையாகும்

10. மகாதேவ் கோவிந்த ரானடே சுதேசிக் கொள்கையினை எவ்வாறு விளக்குகிறார்

1. 1872ல் பூனாவில் தொடர் சொற்பொழிவுகள் மூலம் சுதேசி கருத்துக்களை பரப்பினார்.

2. ஒருவரது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு அப்பொருள்களின் பயன்பாடு குறைவான மனநிறைவைக் கொடுத்தாலும் அதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றார்.

11. பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களை கண்டறிக.

1. பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால், லாலா லஜபதி ராய், அரவிந்த கோஷ்

2. தமிழ்நாட்டில் வ.உ.சிதம்பரனார், வ.வே.சுப்பிரமணியம், சுப்பிரமணிய சிவா, பாரதியார்,

12. தீவிர தேசியவாதம் 1908க்குப் பிறகு ஏன் குறைந்தது?

1. தேசியவாதிகளின் மீது ஆங்கிலேயர்கள் அடக்குமுறையுடன் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது.

2. தீவிர தேசியவாதிகள் தங்கள் கொள்கை முழக்கங்களை பரந்து பட்ட பொருளாதர குறைபாடுகளோடும் பெருவாரியான மக்களோடும் இணைப்பதில் தோல்வியடைந்தனர்

13. தேசிய இயக்கத்தை ஒடுக்க காலணிய அரசு மேற்கொண்ட அடக்குமறைகள் யாவை?

1. 1908 செய்திதாள் சட்டம் - ஆட்சேபணைக்குறிய கருத்துக்களை வெளியிடும் அச்சகத்தின் சொத்துக்களை பறிமுதல் செய்ய வகை செய்தது. 1910 இந்திய பத்திரிக்கைச் சட்டம் - ஆட்சேபணைக்குறிய கருத்துக்களை வெளியிடும் அச்சக உரிமையாளரும், வெளியீட்டாளரும் செலுத்திய பிணைத்தொகையினை பறிமுதல் செய்ய வழி வகுத்தது.

2. இந்திய குற்றவியல் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தம் விசாரணையின்றி முடிவுகளை மேற்கொள்ளவும் அமைப்புகளை தடைசெய்யவும் வழிவகுத்தது

14. 1903 -1914 ஆகிய கால கட்டங்களில் தேசிய இயக்கம் வளர்ந்து வருவதை கட்டுப்படுத்த ஆங்கில அரசு மேற்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் என்ன?

1. தேசிய வாதிகளின் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை இரகசியமாக சேகரிப்பதற்காக 1903ல் குற்ற உளவு துறையை (சிஐடி) பிரிவை கர்சன் துவங்கினார்.

2. 1908 பத்திரிக்கைகள் சட்டம், 1908 வெடி பொருட்கள் சட்டம், 1910 இந்திய பத்திரிக்கைகள் சட்டம், 1911 தேசத்துரோக கூட்டங்கள் தடுப்புச் சட்டம், மேலும் 1914ல் வெளிநாட்டினரின் நுழைவுக்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் சட்டம் இயற்றப்பட்டது.

15. கிலாபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?

1. முதல் உலகப் போரில் துருக்கி கலிபாவின் மிகப் பெரிய தோல்வி மற்றும் அவரது அதிகாரம் துண்டாக்கப்பட்டது முஸ்லிம்களை ஆங்கிலேயருக்கு எதிராக அணிதிரளவைத்தது.

2. முதல் உலகப் போரில் அதன் மீது தீணிக்கப்பட்ட அவமானகரமான அமைதி ஒப்பந்தம்

16. அன்னிபெசண்ட் அம்மையாரல் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கைகளின் பெயர்களைக் கூறுக.

1. **How India Wrought for Freedom** என்ற புத்தகம்

2. வாரப் பத்திரிக்கை - காமன் வீல், தினசரி பத்திரிக்கை -நியூ இந்தியா

17. 1915 ஆம் ஆண்டு இந்திய பாதுகாப்புக்கான சட்டம் பற்றி விவரிக்கவும்

1. தேசிய வாத மற்றும் புரட்சிகர நடவடிக்கைகளை கட்டுப்படுத்த, சந்தேகத்திற்கிடமானவர்கள் மீது வழக்கு தொடர வழி வகுத்தது.

2. மரண தண்டனை, பத்தாண்டு சிறை தண்டனை விதித்தது. விசாரணை ரகசிய மாக மேற்கொள்ளப்பட்டது. மேல் முறையீடு செய்ய வழி எற்படவில்லை.

18. இந்தியா வந்த வேல்ஸ் இளவரசர் எவ்வாறு வரவேற்கப்பட்டார்?

1. பல நகரங்களுக்கு சென்ற வேல்ஸ் இளவரசரின் வருகை இந்தியர்களால் புறங்கணிக்கப்பட்டது

2. நாடு முழுவதும் சட்ட மறுப்பு இயக்கம் நடைபெற்றது. தொழிலாளர்களும், விவசாயிகளும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேல்ஸ் இளவரசரின் வருகை இந்திய மக்களின் விசுவாச உணர்வை வெளிப்படுத்தும் என எண்ணிய ஆங்கில அரசின் எண்ணம் பொய்த்துப் போனது.

19. காந்தியடிகளின் சம்ரான் சத்தியாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யாவர்?

1. காந்தியடிகளின் சம்ரான் சத்தியாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்களராஜேந்திர பிரசாத், மஜாருல் ஹக், ஆச்சார்யா கிருபிளானி, மஹா தேவ தேசாய்

20. இந்திய பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?

1. 1905 ல் கோகலே இந்திய பணியாளர் சங்கத்தை இந்தியர்களுக்கு நலப்பணிகளில் பயிற்சி வழங்க தொடங்கினார்.

2. பின் தங்கிய, ஊரக மற்றும் பழங்குடியின மக்களின் மேம்பாட்டுக்காக தொடங்கப்பட்ட நாட்டின் முதலாவது மதச்சார்பற்ற அமைப்பாகும்

21. பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா குறித்து எழுதுக

1. அம்பேத்காரால் தொடங்கப்பட்டது. தீண்டக்தகாதவர்கள் மீது விதிக்கப்பட்ட இடர்பாடுகளை களைய பாடுபட்டது.

2. தனித்து விடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு.

22. தேசியவாதிகளால் ரௌலட் சட்டம் ஏன் எதிர்க்கப்பட்டது?

1. எந்த வித விசாரணையின்றி எவரையும் சிறையில் அடைக்கலாம் என்று இருந்ததால்

2. 1919 இல் மத்திய சட்ட பேரவை உறுப்பினர்களின் எதிர்பையும் மீறி நிறைவேற்றப்பட்டது.

23. பி.ஆர் அம்பேத்காரல் வழி நடத்தப்பட்ட மஹத் சத்யாகிரகம் பற்றி அறிவது என்ன?

1. தீண்டாமை கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்கு ஊருணிகள் மற்றும் கிணறுகளை அவர்கள் பயன்படுத்த அவர்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத் தர மஹத் சத்யாகிரகம் தொடங்கப்பட்டது.

24. காந்தி - இர்வின் ஒப்பந்தத்தில் எற்றுக் கொள்ளப்பட்டது எது?

1. காந்தி மற்றும் சிறையில் அடைக்கப்பட்ட இந்தியர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

2. சட்டமறுப்பு இயக்கம் முடிவுக்கு வந்தது. சத்யாகிரக போரட்டத்தை கைவிட காந்தி ஒப்புக் கொண்டார்

25. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க கிரேட் பிரிட்டனால் அனுப்பப்பட்ட மூன்று ஆங்கில கம்யுனிசவாதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக

பிலிப் ஸ்ப்ராட்,

பான் ப்ராட்லி,

லெஸ்டர் ஹட்சின்சன்

26 மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞர்களை அடையாளப்படுத்துக.

தேசிய மீரட் சிறைவாசிகளின் பாதுகாப்புக் குழவிற்காக புகழ் பெற்ற வழக்கரிஞர்கள் கே.எப். நாரிமன்,

ஏம்.சி. சுக்லா ஆகியோர் நீதிமன்றத்தில் வாதாடினர்.

27. புகழ் பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E. ஹோம்ஸ் பற்றி நீவீர் அறிவது யாது?

1. கோரக்பூரில் அமர்வு நீதிபதியாக பணியாற்றினார். அப்பொழுது சௌரிசௌரா வழக்கில் 172 பேருக்கு மரணதண்டனை விதித்தார்.

2. கான்பூர் சதி வழக்கை (1924) விசாரித்தார். இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கும் தொழிற்சங்க தலைவர்களுக்கும் நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கினார்

28. இரண்டாவது லாகூர் சதி என்றறியப்பட்ட நிகழ்வு யாது?

1. லாலா லஜபதிராய் மற்றும் ராயின் மரணத்துக்கு பொறுப்பான காவல் துறை கண்காணிப்பாளர் ஸ்காட்ஸ்க்கு ஹிந்துஸ்தான சோசலிஸ்ட் ரிபப்ளிக்கன் அசோசியேசன் வைத்தகுறியில் தவறுதலாக சாண்டர்ஸ் என்ற அதிகாரி லாகூரில் பலியானார்.

2. சாண்டர்ஸ் கொலை தொடர்பாக விசாரணை தொடர்பாக ராஜகுரு, சுகதேவ், ஜதீந்திரநாத் தாஸ், பகத்சிங் மற்றும் 21 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கு இரண்டாவது லாகூர் சதி வழக்கு என்று அறியப்படுகிறது.

29. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா அழைக்கப்பட்ட காரணம் என்ன?

1. இந்தியாவின் முதல் வெற்றிகரமான தொழிலதிபர் இவர் என்பதால் இவரை இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

2. வியாபாரத்திற்காக உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். 1868 ல் டாடா குழுமத்தை நிறுவினார். குர்லா, பம்பாயில் சுதேசி என்ற நிறுவனத்தை நிறுவினார்

30. கௌராக்ஷினி சபை பற்றி குறிப்பு வரைக.

1. பசுக்கள் பாதுகாப்பு சங்கம் ஆகும். பசுக்களை காப்பதில் போர்குணமிக்கவையாக விளங்கின.

2. பசுக்கள் வெட்டுக்கு செல்வதற்காக விற்பனை செய்வதை தடுத்தது. பஞ்சாபில் பசுக்களை காப்பது தொடர்பான கலவரங்கள் 1883 மற்றும் 1891க்கிடையில் 15 பெரும் கலகங்கள் வெடித்தது.

31. இந்து மூஸ்லிம்களிடையே பிரிவினை ஏற்படக் காரணமான ஆர்ய சமாஜத்தின் இரண்டு இயக்கங்கள் யாவை?

சுத்தி மற்றும் சங்கதன்

32. ஆகாகான் தலைமையிலான மூஸ்லீம் லீக் முன் வைத்த கோரிக்கைகள் என்ன?

1. அரசு பணிகளில் மூஸ்லீம்களின் சதவீதத்தை உயர்த்துதல். உயர்நீதிமன்றங்களில் மூஸ்லீம் நீதிபதிகளின் நியமனம்.

2. அரசபிரதிநிதியின் ஆலோசனைக் குழுவில் உறுப்பினராதல்

33. 1923 ல் வாராணாசியில் நடைபெற்ற ஆறாவது இந்து மகாசபை மாநாட்டைப் பற்றி குறிப்பு எழுதுக.

1. மாநாட்டில் 968 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.அவர்களில் ஐக்கிய மகாணத்தைச் சேர்ந்தோர் 56.7 விழுக்காட்டினராவர்.

2. அதற்கு அடுத்தபடியாக பஞ்சாப், டெல்லி, பீகார் மாநிலத்தவர் கலந்து கொண்டனர். சென்னை, பம்பாய், வங்காளத்திலிருந்து (6.6 சதவீதத்தினர்) கலந்து கொண்டனர்.

34. லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன?

1. 1940 மார்ச் 23ல் இஸ்லாமியருக்கான தனி நாடு கோரிக்கை

2. 1930 ல் கிழக்கு மற்றும் வடமேற்கு இந்தியாவின் ஒரு பகுதி என்ற நிலை மாறி தனி நாடு கோரிக்கையானது. ஆங்கிலேயரின் தூண்டுதல் இக்கோரிக்கை முன்வைக்க காரணமாயிற்று.

35. ஆகஸ்ட் கொடையின் சிறப்பைக் கூறுக.

1. வரையறுக்கப்படாத தேதியில் டொமினியன் அந்தஸ்து. அரச பிரதிநிதிகள் குழுவில் இந்தியர்களுக்கு அதிக பிரதிநிதித்துவம்

2. இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர்க்குழு. போருக்குப் பின் அரசியல் சாசனம் இயற்ற வாய்பளித்தல் மற்றும் சிறுபான்மையினரின் உரிமையை பாதுகாத்தல்.

36. கிரிப்ஸ் முன் மொழிவை காங்கிரஸ் ஏன் நிராகரித்தது?

1. விடுதலை பற்றிய உறுதியான நிலைப்பாடு இல்லை. சுதேச அரசாட்சி மாகாணங்களில் அரசியல் சாசன வரைவுக்குழுவிற்கு நியமன முறையில் உறுப்பினர்கள் நியமனம்.

2. இந்திய பிரிவினை பற்றிய குழப்பம். எதாவது ஒரு மாகாணம் அரசியலமைப்பை ஏற்க தயங்கினால் பிரிட்டிஷாரிடம் தனிப்பட்ட ஒப்பந்தம் செய்யும் வழிவகை.

37. சிம்லா மாநாட்டின் பேச்சு வார்த்தைகள் ஏன் முறிந்தன?

1. அரச பிரதிநிதியின் குழுவிற்கு உறுப்பினர்களை அனுப்புவதில் இந்திய தேசிய காங்கிரஸிற்கும், மூஸ்லீம் லீக்கிற்கும் இருந்த உரிமை பற்றிய பிரச்சினையே பேச்சு வார்த்தை முறிய காரணமாயிற்று.

2. மூஸ்லீம் லீக் தான் மட்டுமே இஸ்லாமிய பிரதிநிதிகளை நியமிக்க உரிமை என வாதிட்டதோடு காங்கிரஸ் மூஸ்லீம் பிரதிநிதிகளை நியமிக்க கூடாது என கூறியது.

38. கேப்டன் மோகன்சிங் எவ்வாறு இந்திய தேசிய இராணுவத்தை ஏற்படுத்தினார்?

1. தென்கிழக்கு ஆசியாவில் நிலைகொண்டிருந்த பிரிட்டிஷ் படை அதிகாரிகள் ஜப்பானிய படை தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் படைவீரர்களை போர்க் கைதிகளாய் விட்டு விட்டு ஒட்டம் பிடித்த போது மலேயாவில் இராணுவ அதிகாரியாக இருந்த மோகன்சிங் ஜப்பானியரிடம் ஆதரவு கேட்டார்.

2. தம் கட்டுப்பாட்டில் இருந்த 45000 பேரில் 40,000 பேரை தேர்ந்தெடுத்து 1942ல் இந்திய தேசிய இராணுவத்தை பலப்படுத்தினார்.

39. இணைப்புறுதி ஆவணம் பற்றி நீவீர் அறிவது யாது?

1. இந்திய அரசாங்கச் சட்டம் 1935ன் கீழ் உருவாக்கப்பட்ட ஒரு சட்டபூர்வமான ஆவணம் ஆகும்.

2. இந்த ஆவணமே பிரிவினையின் போது இந்திய சுதேச அரசர்கள் இந்தியா அல்லது பாகிஸ்தான் ஆகிய ஏதேனும் ஒரு நாட்டுடன் இணைவதற்கான ஒப்பந்தமாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

40. அரசியல் நிர்ணய சபையின் அமைப்பினை விளக்குக.

1. 1946 டிசம்பர் 9ல் அரசியலமைப்பு நிர்ணயசபை கூட்டம் நடைபெற்றது. இராஜேந்திர பிரசாத் அதன் தலைவராக பணியாற்றினார்.

2. நேரு அதன் குறிக்கோள் தீர்மானத்தை அறிமுகப்படுத்தினார். டாக்டர் அம்பேத்கார் அரசியலைமைப்பு வரைவுக்குழு தலைவராக இருந்து அரசியலமைப்பை உருவாக்கினார்.

41. அரசமைப்பின் ஷரத்து 370ன் முக்கியத்துவம் என்ன?

1. காஷ்மீருக்கு தனி அந்தஸ்து வழங்கியது. காஷ்மீர் சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதி

2. காஷ்மீர் மக்களுக்கு அளித்த உறுதி மொழிகள், அக்கறை காரணமாக அரசியலமைப்பில் தற்காலிக சரத்து 370 வழங்கியது.

42. ஹைதராபாத் சமஸ்தானத்தை இந்திய யூனியனுடன் சேர்க்க எடுக்கப்பட்ட காவல்துறை நடவடிக்கையினை எது நியாயப்படுத்தியது?

1. ஹைதராபாத் நிஜாம் மற்றும் இராணுவமான இராசாக்கர்கள் மீது தங்கள் கோபத்தை வெளிபடுத்தி தெலுங்கானா மக்கள் இயக்கத்தை கம்யூனிஸட்கள் வழி நடத்தியது.

2. இதன் காரணமாக ஹைதராபாத் மீது காவல்துறை நடவடிக்கை எடுப்பதற்க்கு சட்டபூர்வமான காரணம் கிடைத்தது.

43. ஜே.வி.பி. குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?

1. மொழிவாரி மாநிலம் அமைவதை தற்காலிகமாக ஒத்திவைத்தது.

2. எதிர்காலத்தில் மாநிலங்கள் சீரமைக்க வழி வகுத்தது.

## வரலாறு
## மேல்நிலை இரண்டாம் ஆண்டு
## பாடம் 1 முதல் 8 வரை மூன்று மதிப்பெண் விடைகள்

1. மெக்காலேயின் இந்திய கல்வி குறித்த குறிப்புக்கள்

   1. 1835 ல் இந்திய கல்வி குறித்த குறிப்புகளை வெளியிட்டார்.
   2. ஆங்கில வழியில் கல்வி கற்பிக்க வழியுறுத்தினார்.
   3. நவீன கல்வி வழங்கும் பள்ளிகள், கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் தொடங்க ஆதரவு தெரிவித்தார்.

2. 1853ல் இந்திய சீர்திருத்த கழகத்தின் தலைவரின் சென்னை வருகையைக் குறித்து நீ அறிவது என்ன?

   1. சென்னைவாசிகள் சங்கத்தின் மனு பாராளுமன்றத்தில் 1853ல் விவாதிக்கப்பட்டது.
   2. அதனைத் தொடர்ந்து இந்தியாவிற்கு இந்திய சீர்திருத்த கழகத்தின் தலைவரான H.D. செய்மோர் 1853 ல் சென்னை வருகை தந்தார்.
   3. குண்டூர், கடலூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய இடங்களுக்கும் வருகை தந்தார்.

3. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிக்கைகளின் பங்கினை எழுதுக

   1. தன்னாட்சி, மக்களாட்சி, குடிஉரிமை, தொழில் மயமாக்கல் போன்ற சிந்தனைகளை பரப்பியது.
   2. அரசியலை விமர்சனம் செய்து நாட்டின் பல்வேறு பிரச்சினைகளை விவாதித்தது
   3. வங்க மொழி பத்திரிக்கை சம்வாத் கௌமுகி, பாரசீக மொழி பத்திரிக்கை மிராத்-உல்-அக்பர், மற்றும் அமிர்தபஜார் பத்திரிக்கா, தி பாம்பே கிரானிக்கல், தி ட்ரிப்யூன், தி இண்டியன் மீரர், தி இந்து, சுதேசமித்திரன் ஆகியவை தேசிய உணர்வை தட்டி எழுப்பியது.

4. பிரிட்டிஷ் இந்தியாவில் ஒப்பந்தக் கூலி தொழிலாளர் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?

   1. ஆங்கில பேரரசின் காலனி நாடுகளுக்கு பெருமளவில் விவசாய தொழிலாளர்கள் தேவைப்பட்டதும், இந்தியாவில் 1833, 1843ல் ஏற்பட்ட பஞ்சமும் ஒப்பந்த கூலி முறையை ஊக்கப்படுத்தியது.
   2. இவ்வொப்பந்த முறையில் ஐந்து வருட காலத்திற்கு ஓப்பந்தம் செய்யப்பட்டு இறுதியில் குறைந்த அளவு பணம் பெற்று வீடு திரும்பலாம்
   3. இலங்கை, மொரிஷியஸ், கரீபியன் தீவு, டிரினாடா, பிஜீ, தென்னாப்பிரிக்கா போன்ற இடங்களுக்கு சென்றனர்

5. மே 1884 இல் நடைபெற்ற சென்னை மகாஜன சங்கத்தின் தொடக்கவிழாவில் பங்கேற்ற முக்கியத் தலைவர்களின் பெயர்களை எழுதுக.

   1. G.சுப்பிரமணியம், வீரராகவச்சாரி, அனந்த சார்லு, ரங்கையா, பாலாஜிராவ், சேலம் ராமசாமி

6. தொடக்க காலத்தில் இலங்கைக்குத் தொழிலாளர்களை அனுப்பி வைக்கப்பட்டது குறித்து எழுதுக

   1. 1815 ல் சிலோன் ஆளுநர் மதராஸ் ஆளுநருக்கு “கூலிகளை” அனுப்ப கடிதம் எழுதினார். அதை அவர் தஞ்சை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பினார்
   2. 1833,1843 ல் ஏற்பட்ட பஞ்சங்கள் இலங்கைக்கு தொழிலாளர் செல்ல வழி வகுத்தது.
   3. 1837 ல் பத்தாயிரம் தமிழக தொழிலாளர்கள் இலங்கையில் பணியாற்றினர். 1844ல் 80,000 ஆகவும் 1877 பஞ்சத்தின் போது 3,80,000 ஆக அதிகரித்தது

7. இந்திய நிர்வாக செலவின விவரங்களை கூறுக

1. இரயில்வே துறையில் செய்யப்பட்ட மூதலீடுக்கு செய்தவருக்கு உரிய பங்கு

2. கிழக்கிந்திய கம்பெனியின் பங்கு தாருக்கு உரிய லாபப் பங்கு

3. அதிகாரிகள் மற்றும் தளபதிகளுக்கான ஓய்வுதியம், போருக்கான செலவீனம்

8. காங்கிரஸ் இரண்டாக பிளவுபடக் காரணமான சூரத் மாநாட்டின் செயல்முறைகள் குறித்து எழுதுக

1. காங்கிரஸ் தலைவர் பொறுப்புக்கு மிதவாத தலைவர் ராஷ் பிகாரி கோஷ்சை தீவிர தேசியவாதிகள் எதிர்த்தனர்.

2. கல்கத்தா மாநாட்டு தீர்மானங்களை பின்பற்ற தீவிர தேசியவாதிகள் முற்பட்டனர்.

3. பெரோஸ்ஷா மேத்தா தலைமையிலான மித வாத தலைவர்கள் கல்கத்தா தீர்மானங்களை பின்பற்றுவது என்ற கோரிக்கையை நிகழ்ச்சிநிரலில் இருந்து நீக்க கோரினர்.அதை எதிர்த்தனர். இறுதியில் மாநாடு குழப்பதில் முடிவடைந்தது.

9. சுதேசி இயக்கத்தின் போது அதிகரித்த தனி நபர் வன்முறைகளுக்கான காரணங்களை எழுதுக

1. ஆங்கில அடக்குமுறையை எதிர்க்க பொறுமை இழந்த இளைஞர்கள் அரசியலற்ற ஆக்கசார் செயல்பாடுகளை ஓரளவே எற்றனர்.

2. தீவிர தேசியவாத தலைவர்கள் இதை நீண்டகால போராட்டமாக மாற்றி இளைஞர்களை மாற்றுவதில் தோல்வி

3. இளைஞர்கள் இது இந்தியாவின் வீரத்தின் வெளிப்பாடாக கருதியது

10. பெருவாரியான மக்களை ஒன்றுதிரட்ட சமிதிகளால் பயன்படுத்தப்பட்ட பணிகளின் சிறப்பம்சங்கள் யாவை?

1. தொண்டர் படை அமையப் பெற்றது.

2. உறுப்பினர்களுக்கு பயிற்சி, அறநெறி கற்றல், பஞ்சத்தின் போது சேவை,

3. விழாக்காலங்களில் மக்களிடம் சுதேசி செய்தியை பரப்பல், உள்ளூர் அளவில் பள்ளிகள், நீதிமன்றங்கள் அமைத்தல்

11. 1908ல் நடைபெற்ற கோரல் நூற்பாலை வேலைநிறுத்தம் பற்றி நீவீர் அறிவது யாது?

1. இந்தியாவில் திட்டமிட்டு நடைபெற்ற தொடக்ககால வேலைநிறுத்தம்

2. வ.உ.சி, சுப்பிரமணிய சிவாவின் ஆதரவு

3. அரசின் ஒடுக்குதலையும் மீறி வேலை நிறுத்தம் வெற்றி, இந்த வெற்றி நாடு முழுக்க எதிரொளித்தது. வங்க பத்திரிக்கைகள் பாராட்டு

12. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக

1. சுதேசி போரட்டக்காரர்களை கொடுரமாக ஒடுக்கிய ஆங்கில அதிகாரி டக்ளஸ் கிங்ஸ்போர்டு என்பவரை கொல்வதற்காக நடத்தப்பட்ட தாக்குதல் கொலை செய்யும் பொறுப்பு 18 வயது நிரம்பிய குதிராம்போஸ் மற்றும் 19 வயது பிரபுல்லா சாக்கி யிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. தவறுதலாக இரண்டு ஆங்கில பெண்கள் கொல்லப்பட்டனர்

2. பிரபுல்லா காந்தி தற்கொலை. சாக்கி கைது செய்யப்பட்டு தூக்கு தண்டனை.

3. அரவிந்த கோஷ், அவரது சகோதரர் கோஷ் மற்றும் 35 பேர் கைது. அரவிந்தர் வழக்கின் இறுதியில் விடுதலை. கோஷ்சும் மற்றவர்களும் நாடு கடத்தப்பட்டனர். இவ்வழக்கு புரட்சியாளர்களை மக்களிடம் கதாநாயகர்களாக்கியது.

13. பிபின் சந்திரபால் விடுதலை தினத்தை திருநெல்வேலியில் சுயராஜ்ய தினமாக சுதேசி இயக்கத் தலைவர்கள் கொண்டாட திட்டமிட்டதன் விளைவு யாது

1. அரசு அனுமதி மறுத்தது. சுப்பிரமணிய சிவா, வ.உ.சி கைது. கடையடைப்பு, திருநெல்வேலியில் காவல் நிலையம் தீ வைப்பு

2. வ.உ.சி க்கு இரட்டை ஆயுள் தண்டனை.

3. சிவாவுக்கு 10 ஆண்டு நாடு கடத்தல் தண்டனை.

14. வ.உ.சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகள் குறித்து எழுதுக.

1. 1906ல் சுதேசி நீராவி கப்பல் கம்பெனியை ஆரம்பித்தார்.

2. 1908 ல் கோரல் மில் தொழிலாளர்களுக்காக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு அவர்களின் கோரிக்கைகளை வெற்றி பெற வைத்தார்.

3. SS.கலியா SS.லாவோ என்ற இரு கப்பல்களை இயக்கி சுதேசி இயக்கத்தை விரைவுபடுத்தினார்.

15. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?

1. சுதேசி முயற்சிகள் அடக்கப்பட்டது. சுதேசி தலைவர்கள் கைது செய்யப்பட்டு அவமானபடுத்தப்பட்டது.

2. திருநெல்வேலி நிகழ்வுக்கு பழிவாங்க

3. ஐரோப்பிய அதிகாரிகளை கொல்வதன் மூலம இந்தியர்களை புரட்சிக்கு தூண்டலாம் என்று பாரத மாதா சங்கத்தினர் கருதினர். வாஞ்சி நாதன் பாரத மாதா சங்கத்தின் உறுப்பினராவார்.

16. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள் பற்றி விவாதிக்கவும்

1. பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை எற்படுத்துவது

2. தாய்நாடு பற்றிய பெருமையுணர்வை மக்களிடையே எற்படுத்துவது.

3. திலகரும் அன்னிபெசண்ட் அம்மையாரும் இந்த இரண்டு குறிக்கோள்களை தன்னாட்சி இயக்கத்தின் குறிக்கோளாக வரையரை செய்தனர்.

17. இந்திய சுதந்திரபோராட்டத்தின் ஒரு அத்தியாயமாக காதர் இயக்கம் கருதப்படுவது ஏன்?

1. சோகன் சிங் பக்னாவை தலைவராக கொண்டு 1913ல் லாலா ஹர் தயால் என்பவர் சான்பிரான்ஸ்சிஸ்கோவில் நிறுவினார்.

2. கனடா வாழ் சீக்கியர்களே பெரும்பாலும் உறுப்பினராக இருந்தனர்.

3. காதர் என்றால் கிளர்ச்சி என்று பொருள். காதர் என்ற பத்திரிக்கையையும் வெளியிட்டது

4. கோமகடமரு என்ற கப்பலில் இந்தியா திரும்பிய இவர்கள் பிரிட்டிஷ அதிகாரிகளுடன் எற்பட்ட மோதலில் பலர் இறந்தனர். பலர் கைது செய்யப்பட்டனர். இந்த நிகழ்வு இந்திய தேசிய இயக்கத்திற்கு ஆழமான வடுவை எற்படுத்தியது

18. 1920 மார்ச்சில் நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டில் கிலாபத் இயக்கம் சார்பாக முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்ன?

1. துருக்கி சுல்தான் கலிபாவாக இடையூறு இன்றி செயல்படவும் முஸ்லிம் புனித தலங்கள் அவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்

2. சுல்தானிடம் போதிய பகுதிகள் தரப்பட்டு முஸ்லிம் மதம் பாதுகாக்கப்பட வேண்டும்

3. அரேபியா, சிரியா, ஈராக், பாலஸ்தீனம் ஆகிய பகுதிகள் சுல்தானின் இறையாண்மையின் கீழ் வர வேண்டும்

19. சென்னை தொழிற்சங்கத்தின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம் என்ன?

1. 1918 ல் பி.பி. வாடியா அவர்களால் சென்னை தொழிற்சங்கம் துவக்கப்பட்டது.

2. புக்கிங்ஹாம், பெரம்பூர், கர்நாட்டிக் மில் ஆகிய இடங்களில் உள்ள தொழிற்சாலையில் உள்ள குறைபாடு காரணமாக இங்கு தொழிற்சங்கம் எற்பட்டது

3. ஓட்டு மொத்தமாக பேரம் பேசுவதைப் பின்பற்றி வகுப்பு போரட்டத்துக்கு தொழிற்சங்கம் சார்ந்த கொள்கைகளை ஒரு ஆயதமாக பயன்படுத்தியது.

4. இந்த அலை இந்தியாவின் பிற பகுதிகளுக்கும் பரவி இறுதியில் 1920 ல் பம்பாயில் **AITUC** என்ற தொழிலாளர் அமைப்பு லாலா லஜபதிராய் தலைமையில் அமைய வாய்பளித்தது.

20. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு எழுதுக

1. சத்யபால், சாய்புதீன் கிச்லு கைதை கண்டித்து ஜாலியன் வாலாபாக்கில் மக்கள் கூடினர்.

2. பஞ்சாப் ஆளுநர் மைக்கேல் ஓ டயரும் ராணுவ தளபதி ரெஜினால்டு டயரும் நிராயுதபாணியான மக்கள் மீது குண்டுகள் தீரும் வரை சுட உத்தரவிட்டார்.

3. அரசின் கணக்கின்படி 379 இறந்ததாக கூறினாலும் ஆயிரகணக்கில் இறந்தனர்.ராணுவச் சட்டம் பஞ்சாப் முழுவதும் அமுல்படுத்தப்பட்டது. நாடு முழுவதும் இதற்கு எதிர்ப்பு எழுந்தது. இந்திய சுதந்திர தாகம் வீறுகொண்டெழுந்தது.

21. மகாணங்களில் இரட்டையாட்சி முறை பற்றி எழுதுக

1. 1919 மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் (1919 இந்திய கவுன்சில் சட்டம்)

2. மாகாண சட்டசபையில் பெருவாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இருந்தனர்.

3. இரட்டை ஆட்சியின் கீழ் மகாணங்களுக்கு நிர்வாகத்தில் அதிக பங்கு அளிக்கப்பட்டது

4. ஒதுக்கப்பட்ட துறைகளான சட்ட ஒழுங்கு, நிதி ஆகியவை ஆங்கிலேயர் வசம் இருந்தது.

5. மாற்றப்பட்ட துறைகளான சுகாதாரம், கல்வி, உள்ளாட்சி போன்ற துறைகள் இந்தியப் பிரதிநிதிகள்

வசம் இருந்தது. இவர்கள் சட்டபேரவைக்கு கட்டுப்பட்டவர்கள

22. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?

1. தீண்டத்தகாதோருக்கு தனித் தொகுதிகள் அளிக்கப்பட்டதை காந்தியடிகள் எதிர்த்தார். சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார்.

2. காந்தியடிகளுக்கும் அம்பேத்காருக்கும் இடையில் பூனா ஒப்பந்தம் எற்பட்டது

3. வகுப்புவாரி தொகுதி ஒதுக்கீடு திருத்தப்பட்டது. இடங்களின் ஒதுக்கீடு குறித்து உத்திரவாதம் அளிக்கப்பட்டது

4. இடஒதுக்கீடு பெற்ற தொகுதிகள் என்ற சட்ட அம்சம் அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டது

23. பிராமண அல்லாதார் இயக்கத் தலைவர்கள் காலனி அரசாங்கத்தை கையாள்வதில் தொடக்க கால தேசியவாதிகள் கடைபிடித்த அதே யுக்தியினை கையாண்டனர். விவரி

1. ஆங்கிலேய அரசு மற்றும் நவீன கல்வியை ஆதரித்தனர்

2. மக்கள் தொகையின் அடிப்படையில் பிரதிநிதித்துவத்தில் முன்னுரிமை கோரினர்.

3. தங்கள் சமூக வளர்ச்சிக்கு பாடுபட்டனர். ஆங்கிலேயரிடம் கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காக மானியம் சலுகை பெற்றனர்.

24. மாற்றத்தை விரும்புவர்கள் - மாற்றத்தை விரும்பாதவர்கள் - வேறுபடுத்துக.

1. மாற்றத்தை விரும்புவர்கள்

தாஸ், மோதிலால் நேரு போனற் தலைவர்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற விரும்பினர்.

தீவிர அரசியலில் ஈடுபடவும், சட்ட பேரவைகளை முடக்கவும் விரும்பினர்.

2. மாற்றத்தை விரும்பாதவர்கள

காந்தி போன்ற தலைவர்கள் தேர்தல் அரசியல் தங்களது கவனத்தை திருப்பும் செயல் என கருதினர்.

நூல் நூற்பது, தீண்டாமை ஒழிப்பு, சட்டமறுப்பு இயக்கம் ஆகியவற்றில் நாட்டமாயினர்.

25. பிரதம அமைச்சர் ராம்சே மேடோனால்டின் வகுப்புவாத அறிக்கையை பற்றி எழுதுக

1. 1932 ல் வெளியிடு

2. காந்தியடிகள் இதை ஏற்க மறுத்தார். அம்பேத்கருடன் காந்தியடிகள் விவாதம் நடைபெற்றது. முடிவு எட்டப்படவில்லை

3. ஆங்கிலேய பிரதமர் தலையிட்டு முடிவெடுக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்படவில்லை

4. இடஒதுக்கிடு உடன் தனித் தொகுதிகளை ராம்சே மேடோனல்டு அறிவித்தார்.

26. மூன்று வட்ட மேஜை மாநாடுகளின் தோல்விக்கு பிறகு காங்கிரஸ் ஏன் தடைசெய்யப்பட்டது?

1. சட்ட மறுப்பு இயக்கத்தை மீண்டும் காங்கிரஸ் தொடங்கியது

2. பொருளாதார வீழ்ச்சி காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நேரத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் போராட்டத்திற்கு காங்கிரஸின் ஆதரவு

3. தேசியவாதம் தொடர்பான பிரசுரங்கள் மற்றும் பிரச்சாரங்களை காங்கிரஸ் ஆதரித்தது. காந்தி உள்பட பல தலைவர்கள் கைது.

27. சிட்டகாங் ஆயதப் படை தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?

1. சுரியாசென் தனது புரட்சிக் குழவை இந்தியக் குடியரசு ராணுவம் என பெயர் சூட்டினார்.சிட்டகாங்கில் 1930 ல் கொரில்லா தாக்குதல் நடத்த திட்டமிட்டார். ரயில்வே, தந்தி, தகவல் தொடர்பு அலுவலகங்கள் படைதளங்கள், காவல் நிலையங்களை தாக்கினார்

2. புரட்சியாளர்கள் தேசியக் கொடியை எந்தி வந்தேமாதரம், புரட்சி ஓங்குக என்ற புரட்சி கோஷங்களை முழங்கிக் குறிப்புணர்த்தினர்.

28. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் பற்றி குறிப்பு எழுதுக.

1 ஜே.என். டாடாவின் மகன்களான தோரப்ஜி டாடா மற்றும் ரத்தன்ஜி டாடா ஆகியோர் தந்தையின் கனைவை நனவாக்க எண்ணினர்.

2. 1907ல் இரும்பு எஃகு நிறுவனத்தை தொடங்கினர்.

3. இதற்காக அவர்கள் இரண்டு ஆண்டுகள் அமெரிக்காவிற்கு சென்று தொழில்நுட்பங்களை கற்று வந்தனர்.

29. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்பு குறித்து எழுதுக

1. ஆரம்பத்தில் இந்திய தேசிய காங்கிரஸில் பணியாற்றினார்.பின்னர் திரு. வி.கல்யாணசுந்தரத்துடன் இணைந்து புரட்சி கர பாதையில் பயணித்தார். பல தொழிற்சங்கங்களை தோற்றுவித்தார்.

2. 1928 தென்னிந்திய ரயில்வே வேலைநிறுத்ததில் முக்கிய பங்காற்றினார்

3. 1923ம் ஆண்டு மே மாதம் முதன் முதலாக மேதினம் கொண்டாடினார்.1925 கம்யூனிஸ்ட் குழக்களின் மாநாட்டில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

30. 1921 ல் நடைபெற்ற மலபார் கலகத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்து யாது?

1. இந்து மூஸ்லிம் மோதலாக மதிப்பிட்டார்.

2. மூஸ்லீம் தலைவர்கள் மன்னிப்பு கேட்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

3. ஆங்கில ஆட்சிக்கெதிராகவும், இந்து நிலப்பிரபுகளுக்கு எதிராக களமிரங்கிய இப்புரட்சியில் தீவிர இந்து மத எதிர்ப்புணர்வு வெளிப்பட்டது.

31. இஸ்லாமியர்களுக்காக மத்தியில் முதலில் அமைக்கப்பட்ட அரசியல் கட்சியின் நோக்கங்களை எழுதுக.

1. பிரிட்டிஷ் அரசிடம் விசுவாசத்துடன் நடத்தல், அமைப்பின் செயல்பாடுகள் குறித்து அரசுக்க எழும் தவறான கருத்தை நீக்குதல்

2. மூஸ்லீம்களின் விருப்பம், அரசியல் உரிமைகள், அவர்கள் மேம்பாடு, பாதுகாப்பு, உயர்ந்த லட்சியங்களை கன்னியமான முறையில் அரசுக்கு தெரிவித்தல்.

3. இந்திய மூஸ்லீம்கள் மற்ற இனத்தவரிடம் பகைமை பாராட்டாமலும் முன் விரோதம் கொள்ளாமலும் இருக்கச் செய்தல்.

32. 1909 ம் ஆண்டின் மிண்டோ-மார்லி சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை கூறுக.

1. தனித் தொகுதி/வகுப்புவாத தொகுதி முறை அறிமுகம். இந்த முறையில் மூஸ்லிம்கள் மட்டுமே மூஸ்லீம் வேட்பாளருக்கு வாக்களிக்க முடியும்.

2. பேரரசு சட்டமன்றத்தில் 27 இடங்களில் 8 இடங்களை மூஸ்லீம்களுக்க வழங்கியது.

3. மாகாண சட்டமன்றங்களில் மதராஸ், பம்பாய்க்கு தலா நான்கு இடங்களும், வங்காளத்தில் 5 இடங்களும் மூஸ்லீகளுக்கு வழங்கியது.

33. வகுப்புவாதம் ஒரு கருத்தியலாக எவ்வாறு வரையறுக்கப்படுகிறது?

1.ஒரு மத்தினரை பிறமத்தினரோடு பொருள் சார்ந்த பிரச்சினை உள்பட எல்லா விஷயங்களிலும் விரோதபோக்கோடு சண்டையிடும் வகையில் உருவாக்குவது வகுப்புவாதம் ஆகும்.

2. நேரு கருத்து: தேசியவாதத்திற்கு எதிரானது. பிற்போக்கு வாதிகள் நவீன உலகத்திற்கு பொருந்தாக ஒரு கருத்தை விடாப்பிடியாக பிடித்திருப்பது.

3. பிற அறிஞர்கள் கருத்து: ஒரு குழு குறுகிய நோக்கத்தில் மற்ற குழுக்கள் மற்றும் அரசாங்கத்திடம் இருந்து வரும் எதிர்ப்பை மடைமாற்றம் செய்து அணி திரட்டும் திட்டமிட்ட முயற்சியாகும்.

34. 1927 ம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற மூஸ்லிம் லீக் மாநாட்டின் முன் மொழிவுகள் யாவை?

1. மாநாடு முன்வைத்த நான்கு கொள்கைகளை ஏற்றுக் கொள்ளப்பட்டால் தனித் தொகுதிக் கோரிக்கையை கைவிடுவதாக அறிவித்தது.

1. பம்பாயிலிருந்து சிந்து பகுதியை பிரிப்பது.
2. பலுச்சிஸ்தானையும் அதன் எல்லைகளையும் சீர்திருத்துவது.
3. பஞ்சாப், வங்காளத்தில் மக்கட்தொகை அடிப்படையில் பிரதிநித்துவம்
4. மத்திய சட்டமன்றத்தில் மூஸ்லீம்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு

35. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காத அமைப்புகளின் பெயரை எழுதுக.

1. மூஸ்லீம் லீக்
2. சிரோன்மனி அகாலிதளம்
3. இந்து மகாசபை

36. சர் ஸ்டாப்போர்டு கிளிப் அவர்களின் முன்மொழிவுகளை விவாதிக்க

1. இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குதல்
2. அரசியல் சாசனகுழுவிற்கு சுதேச அரசுகள் சார்பில் நியமன உறுப்பினர்களை நியமிக்க அனுமதி
3. அரசியல் சாசனகுழு உருவாக்குதல், புதிய அரசியல் சாசனத்தை ஏற்காத மாநிலங்கள் பிரிட்டிஷாருடன் தனியாக ஒப்பந்தம் செய்ய வசதி.

37. இந்திய தேசிய காங்கிரசிலிருந்து சுபாஷ் சந்திரபோஸ் நீக்கப்பட்டதற்கான காரணங்களை விளக்குக.

1. காந்தியடிகளின் ஆதரவு இன்மை அவரது வேட்பாளரை எதிர்த்து வெற்றி பெற்றமை.
2. காங்கிரசின் முக்கிய மேல்மட்டத்தலைவர்களின் ஒத்துழைப்பின்மை.
3. பார்வடுபிளாக் கட்சியை தொடங்கியமை, இரண்டாம் உலகப்போரில் அச்சு நாடுகளுக்கு ஆதரவு தெரிவித்தமை.

38. 1946 ல் ஏற்படுத்தப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் இடம் பெற்ற மூஸ்லிம் லீக் பிரதிநிதிகள் யாவர்?

1. லியாகத் அலிகான்
2. I.I. சுந்திரிகர்
3. A.R. நிஷ்தர்
4. கஸன்பர் அலிகான்
5. ஜோகேந்திர நாத் மண்டல்

39. எத்தகைய சூழ்நிலையில் காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கம் பற்றி சிந்தித்தார்?

1. ஆங்கிலேயர் விடுதலை பற்றிய உறுதிமொழி கொடுக்காத சுழ்நிலை.
2. இரண்டாம் உலக போரில் சுபாஷ் சந்திர போஸின் அச்சு நாடு ஆதரவு நிலை. சுபாஷின் வீரமிக்க வானொலி உரை
3. பிரிட்டிஷ் பிரதமர் சர்சிலின் காங்கிரஸ் மிதான வெறுப்புணர்வு பார்வை.

Send Your Questions & Answer Keys to our email id - padasalai.net@gmail.com

40. காஷ்மீர் அரசர் எவ்வாறு இணைப்புறுதி பத்திரத்தில் கையொப்பமிட்டார்?

1. காஷ்மீர் அரசர் முதலில் தனது அரசை சுதந்திர அரசாக அறிவித்தார். அந்நாட்டு மக்கள் தேசிய மாநாட்டு தலைமையில் அவருக்கு எதிராக போராடினர்.

2. காஷ்மீர் மன்னரால் பாக்கிஸ்தானியர் காஷ்மீரை சுரையாடுவதை கட்டுப்படுத்த முடியவில்லை. இந்தியாவின் உதவியை நாடினார்.

3. காஷ்மீர் மன்னர் இணைப்புப்பத்திரத்தில் கையொப்பமிட்டபின்பே இந்திய இராணுவம் அனுப்பப்படும் என பட்டேல் கூறியதைத் தொடர்ந்து காஷ்மீர் மன்னர் கையொப்பமிட்டார்.

41. இந்திய அரசியலமைப்பின் தனித் தன்மைகள் யாவை?

1. அடிப்படை உரிமைகளையும் அரசுக்கு வழிகாட்டும் நெறிகளையும் உடையதாய் இருந்தது.

2. சுதந்திரமான தேர்தல் ஆணையம், சுதந்திரமான நீதித்துறையையும் உடையது. வயது வந்தோர் வாக்குரிமை,

3. மக்கள் பிரதிநிதிகள் சட்டம் இயற்றும் இறையான்மை. ஊலகின் பல்வேறு அரசியலமைப்பின் சிறப்பியல்புகளை எடுத்துக் கொண்டு உருவாக்கியது.

42. பிரிவினையால் ஏற்பட்ட கடுமையான விளைவுகளை சுட்டிக் காட்டுக.

1. இரு நாடுகளிலும் வாழ்ந்த சிறுபான்மையினர் அச்சம் கொண்டனர். ஆகதிகளாய் இரண்டு நாடுகளுக்கும் சென்றனர்.

2. இரண்டு நாடுகளிலும் குடிபெயர்ந்த குடும்பங்களின் சொத்துக்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. வன்முறையில் 2 முதல் 5 லட்சம் பேர் இறந்தனர். 15 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்தனர்.

3. பாக்கிஸ்தான் இஸ்லாமிய குடியரசாகவும் இந்தியா சமயச் சார்பற்ற மக்களாட்சி குடியரசாகவும் உருவாகியது.

43. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.

1. தனது மற்றும் பிற நாட்டின் நில எல்லை மற்றும் இறையாண்மையை மதித்து நடத்தல்

2. நாடுகள் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்

3. மற்ற நாட்டின் உள் விவகாரத்தில் தலையிடாமை.

4. நாடுகளுக்கிடையே சமத்துவம் மற்றும் கூட்டுறவு மூலம் பயனடைதல்.

5. சமாதான சகவாழ்வு.

எனதருமை வரலாற்று மாணவர்களே அதிக மதிப்பெண் பெற்று வரலாற்றில் சாதனை படைக்க வாழ்த்தும்
உங்களவன்
சு. சண்முகசுந்தரம் முதுகலை ஆசிரியர் பாரதியார் வித்யாலயம் மேல்நிலைப்பள்ளி, தூத்துக்குடி

Padasalai